[9th September 1958

SRI A. V. P. ASAITHAMBI : விருதுநகரில் ஆஸ்பத்திரி நிறுவ ஒரு லட்சம் ரூபாய் நன்கொடையும், 6 எக்கர் நிலம் தருவதற்கும் முன் வந்திருக்கும்போது அங்கே ஆஸ்பத்திரியை அமைக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : வைத்திய இலாகா அதிகாரிகள் இந்த இடத்தைச் சென்று பார்வையிட்டு வந்திருக்கிறார்கள் கூடிய சீக்கிரம் அதைப்பற்றி முடிவு எடுக்கப்படலாம்.

*Roads*

* 109 *Q.*—SRI K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to convert the cart-track from Paramakudy town in the Ramanāthapuram district to Tiruchendur in the Tirunelveli district into a pucca metalled road?

THE HON. SRI P. KAKKAN : There is no regular cart-track from Paramakudy to Tiruchendur and the question of converting it into a pucca metalled road does not therefore arise.

SRI K. RAMACHANDRAN : இந்தப் பாதை திருச்செந்தூர் போவதற்கு நாற்பது, ஐம்பது மைல் குறைவாக இருக்கிறதென்றும், ஏற்கெனவே சர்வே செய்யப்பட்டிருக்கிறதென்றும் அறிகிறேன். அதை உடனடியாக எடுத்துச் செப்பனிடுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

THE HON. SRI P. KAKKAN : பரமக்குடியிலிருந்து திருச்செந்தூர் போவதற்கு 91 மைல் ஆகிறது. இந்த 91 மைல்களையும் 6 பிரிவுகளாக எடுத்துக்கொண்டு வேலை நடைபெற்று வருகிறதென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

*Juvenile smoking*

*110 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to ban juvenile smoking?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

*Engineering Colleges*

* 111 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have constituted a Board for selection of candidates to the Engineering College in the State;

(*b*) who the members of the Board are; and

(*c*) whether there is any reservation of seats to be filled by the management of private colleges?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes.

(*b*) (1) Sri G. R. Damodaran, Principal, P.S.G. College of Technology, Coimbatore.

(2) Sri V. P. Appadurai, Chief Engineer for Electricity, Madras.